# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No. 133/2022
Prosecution side witness for P.W.18

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ரஞ்சித்பாண்டி | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.06.2026**

A4 present. Others are absent , U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் பிறந்தது முதல் விருதுநகர் மாவட்டம் கோவில்பட்டி, ஏழாயிரம் பண்ணை முத்தாண்டியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். B.A வரை படித்துள்ளேன். சாட்சி ரமேஷ் எனக்கு தெரியாது, ஆஜர் எதிரியை தெரியாது. குறிப்பாக எதிரி உய்க்காட்டான் என்பவரை தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது, எங்கள் முன்பாக எதிரிகள் யாரையும் கைது செய்யவில்லை. எங்கள் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை. இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மணியை தெரியாது. வேறு ஒன்றும் தெரியாது. எதிரி உய்க்காட்டான் கொடுத்ததாக கூறியுள்ள ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அதன் அடிப்பமையில் சான்று பொருட்கள் கைப்பற்றிய போது தயார் செய்த அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். இந்த கையெழுத்தை போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் போட்டுக்கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் காணப்படும் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ- 22** ஆகும். அத்தாட்சியில் காணப்படும் 2 வது கையெழுத்து மட்டும் **அ.சா.அ.23** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 02.04.2022 ஆம் தேதி மாலை 04.00 மணிக்கு கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் என்னை அழைத்ததன்பேரில் நானும், அத்தைக்கொண்டானை ரமேஷ் என்பவரும் கோவில்பட்டி காவல் நிலையம் சென்று ஆய்வாளர் முன்பு ஆஜரானோம் என்றும், அங்கு அவர் எங்களை சாட்சியாக இருக்க அழைத்ததன்பேரில் நாங்கள் சம்மதித்தோம் என்றும், எங்கள் இருவர் முன்பும் எதிரி உய்க்காட்டான் என்பவரை எவ்வித துன்புறுத்தலோ, தூண்டுதலோ, ஆசைவார்தையோயின்றி விசாரிக்க எதிரி உய்க்காட்டான் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில்தான் நானும், ரமேஷ்–ம் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றும் பின்பு உய்க்காட்டானை கங்கைகொண்டான் கூட்டிசென்று உய்க்காட்டான் அவர் வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த 2 ATM கார்ட் 2 பாஸ் புக் அகியவற்றை அன்றைய தினம் மாலை 06.30 மணிக்கு எங்கள் இருவர் முன்பு ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நாங்கள் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றும் அதுதான் அ.சா.ஆ.22, 23 என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என சொல்லப்பட்டது.</u>

# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No. 133/2022
Prosecution side witness for P.W.19

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. முருகன் | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.06.2026**

A4 present. Others are absent , U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**முதல் விசாரணை:-**

நான் கடந்த 30 வருடங்களாக துாத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி, அத்தைகொண்டானில் குடியிருந்து வருகிறேன். ஆட்டோ வைத்து தொழில் செய்து வருகிறேன். சாட்சி தண்டாயிதபாணியை எனக்கு தெரியாது, ஆஜர் எதிரியை தெரியாது. குறிப்பாக எதிரி சுபாஷ் என்பவரை தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது, எங்கள் முன்பாக எதிரிகள் யாரையும் கைது செய்யவில்லை. எங்கள் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை. இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மணியை தெரியாது. வேறு ஒன்றும் தெரியாது. எதிரி சுபாஷ் கொடுத்ததாக கூறியுள்ள ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அதன் அடிப்பமையில் சான்று பொருட்கள் கைப்பற்றிய போது தயார் செய்த அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். இந்த கையெழுத்தை போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் போட்டுக்கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் காணப்படும் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ- 24** ஆகும். அத்தாட்சியில் காணப்படும் 1வது கையெழுத்து மட்டும் **அ.சா.அ.25** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 07.04.2022 ஆம் தேதி மாலை 04.00 மணிக்கு கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் என்னை அழைத்ததன்பேரில் நானும், கோவில்பட்டி காந்திநகர் மனோகரன் மகன் தண்டபானி என்பவரும் கோவில்பட்டி காவல் நிலையம் சென்று ஆய்வாளர் முன்பு ஆஜரானோம் என்றும், அங்கு அவர் எங்களை சாட்சியாக இருக்க அழைத்ததன்பேரில் நாங்கள் சம்மதித்தோம் என்றும், எங்கள் இருவர் முன்பும் எதிரி சுபாஷ் என்பவரை எவ்வித துன்புறுத்தலோ, தூண்டுதலோ, ஆசைவார்தையோயின்றி விசாரிக்க எதிரி சுபாஷ் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில்தான் நானும், தண்டபானியும் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றும் பின்பு சுபாஷை ஸ்ரீவில்லிபுத்தூர் மலைப்பகுதியை மாலை சுமார் 5.45 மணியளவில் கூட்டிசென்று சுபாஷ் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த TN 76 AH 3057 என்ற எண் கொண்ட பைக்கையும் ஹெல்மெட் அகியவற்றை அன்றைய தினம் மாலை 06.00 மணிக்கு எங்கள் இருவர் முன்பு ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நாங்கள் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றும் அதுதான் அ.சா.ஆ.24, 25 என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என சொல்லப்பட்டது.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE,
THOOTHUKUDI.

Case No. S.C. No. 133/2022
Prosecution side witness for P.W.20

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. மாதவராஜ் | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.06.2026**

A4 present. Others are absent , U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டம் வெள்ளாரம் கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வருகிறேன். கடந்த 2022ம் வருடம் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி இனாம்மணியாச்சியில் கிராம நிர்வாக அதிகாரியாகபணிபுரிந்து வந்து அப்போது என்னுடன் கலைச்செல்வி என்பவர் கிராம உதவியாளராக பணியாற்றி வந்தார். கடந்த 8.4.2022 ம் தேதி நான் என் அலுவலகத்தில் இருந்த போது கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் எங்களை சாட்சியாக அழைத்ததின் பேரில் நாங்கள் இருவரும் அன்றைய தினம் கோவில்பட்டி மேற்கு காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு காவல் நிலையத்தில் சூரியதினேஷ் என்பவர் இருந்தார். அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். அவரை எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் விசாரணை செய்தார். அப்போது அவர் தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் கொலைசெய்ததை பற்றி சொன்னால் கொலைக்கு பயன்படுத்திய அரிவாள்களை ஸ்ரீவில்லிபுத்தூர் திருவண்ணாமலை அருகே ஒரு கல்

குவாரியில் புதரில் மறைத்து வைத்திருந்ததாக சொன்னார். அவரது இரத்தம்பட்ட ஆடைகளை எரித்துவிட்டதாக சொன்னார். அதை எதிரி சூரிய தினேஷ் சொல்லசொல்ல ஆய்வாளர் Laptop ல் பதிவு செய்தார். அதில் நானும் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்து கொடுத்தோம். அன்று இரவு கணம் ஆகிவிட்டதால் அன்று இருந்துவிட்டு மறுநாள் 9.4.2022 ம் தேதி 12.00 மணிக்கு கோவில்பட்டியில் இருந்து நான் என் உதவியாளர் கலைச்செல்வி, ஆய்வாளர் மற்றும் எதிரி ஆகியோர் சின்னதிருவண்ணாமலை சென்று கல்குவாரி அருகில் இருந்த முட்புதரில் இருந்து எதிரி அடையாளம் காட்டிய இடத்தில் இருந்து போலிசார் கொடுக்ககூடிய அரிவாளை கைப்பற்றினார்கள். அந்த அரிவாளில் இரத்தகறை இருந்தது. அந்த அரிவாளை கைப்பற்றிய அத்தாட்சியில் நானும் கிராம உதவியாளர் கலைச்செல்வியும் கையெழுத்து செய்து கொடுத்தோம். அந்த அத்தாட்சி நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுவது அது அ.சா.ஆ.26 ஆகும். எதிரி சுபாஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுவது அது அ.சா.ஆ.27 ஆகும். அந்த அரிவாளை நீதிமன்றத்தில் காட்டினால் என்னால் அடையாளம் காட்டப்பட இயலும் அது நீதிமன்றத்தில் காட்டப்படும் சுமார் 45 செ.மீ நீளம் கொண்ட கொடுக்கு கைப்பிடியுடன் கூடிய இரத்தக்கறை படிந்த அரிவாள் ஒன்று. சொத்து பட்டியல் வரிசை எண்.13 ல் உள்ளது. அது சா.பொ.ஆ.1 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பொதுவாக எங்கள் கிராம எல்லையை விட்டு அடுத்த கிராமத்திற்கு செல்லவேண்டும் என்றால் எங்கள் உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்று தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும் சாட்சியத்திலும் மேற்சொன்னவாறு அனுமதி எதுவும் பெற்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அரிவாள் கைப்பற்றியதாக சொல்லக்கூடிய இடம் வேறு மாவட்டத்தை சேர்ந்த பகுதி என்று சொன்னால் சரிதான். நான் வேறு மாவட்டத்திற்கு சென்றது சம்மந்தமாக என்னுடைய உயர்

அதிகாரியிடமோ அல்லது அந்த மாவட்டத்தை சேர்ந்த வருவாய் அதிகாரியிடமோ அனுமதி கடிதம் பெற்று ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். அரிவாள் கைப்பற்றியதாக சொல்லக்கூடிய கல்குவாரி பயன்பாட்டில் இருந்ததா அங்கு ஆட்கள் யாரும் வேலை பார்த்தார்களா என்று சொல்லமுடியுமா என்றால் இல்லை. எதிரி கொடுத்ததாக சொல்லக்கூடிய ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை பக்கங்களை கொண்டது என்றோ எத்தனை பிரதிகள் எடுக்கப்பட்டது என்றோ எனக்கு தெரியாது. காவல்துறை விசாரணைக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டியது கிராம நிர்வாக அலுவலரின் கடமைகளில் ஒன்று என்று சொன்னால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில் என்முன்பாக எதிரி எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனடிப்படையில் எந்தவித வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலிசார் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த ஆவணங்களில் இயந்திரதனமாக கையெழுத்துமட்டும் இட்டுவிட்டு போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.